**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 96 /2019 PW1**

19.03.2025 **வா.சா.1 சரசு சத்திய வாக்குமூலத்தின் பேரில் 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

எனது கணவர் இறந்தது சம்மந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் சொல்லச் சொல்ல போலீசார் புகாரை எழுதினார்கள். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்த தகவலை என் கணவர் ஓட்டிச் சென்ற டாடா ஏஸியில் பயணம் செய்தவர்கள் சொல்லி எனக்கு தெரியவந்தது. எங்கள் ஊரைச் சேர்ந்த தேவராஜ், ஏழுமலை மற்ற இரண்டு பேர் தான் என் கணவரின் வாகனத்தை வாடகைக்கு அழைத்து சென்றார்கள். மேற்படி யார் தகவல் கொடுத்தது என பெயரைக் குறிப்பிட்டு புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மழை காரணமாக மின்சார ஒயர் அறுந்து விழுந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஒயர் யாருடைய ஒயர் என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் தவறாக சொல்கிறேன் என்றும் யாருடைய ஒயர் அறுந்து இருந்தது என புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய புகாரில் மின்சார கம்பத்தில் இருந்த ஒயர் அறுந்து விழுந்து விபத்து ஏற்பட்டதா அல்லது வேறு எந்த ஒயர் விழுந்து விபத்து ஏற்பட்டதா என நான் தெளிவாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்திற்கு யார் காரணம் என்றும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி மீது மேற்படி குற்ற வழக்கில் எந்த ஒரு குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றும், ஆகவே 3ம் பிரதிவாதி மேற்படி விபத்திற்கு பொறுப்பல்ல என்றால் சரியல்ல. இறப்பிற்கான காரணம் குறித்த கருத்துரை வழங்கப்படாததால் மேற்படி வா.சா.ஆ.3 ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதிகளை என்ன காரணத்திற்காக இந்த வழக்கில் சேர்தேன் என்ற காரணத்தை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி சம்பவ இடத்தில் பெயிண்ட் அடிப்பதற்கு லைட் போட்டு ஒயர் பயன்படுத்தியதாகவும்,

அதன் காரணமாக விபத்து ஏற்பட்டது என்றும் எந்த வித ஆதாரமும் இன்றி இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி இந்த விபத்திற்கு காரணம் என விபத்து குற்ற வழக்கில் எந்த வித அறிக்கையையும் போலீசார் தாக்கல் செய்யாத போது இந்த வழக்கில் 3ம் பிரதிவாதியிடம் நான் எந்த ஒரு இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. புகாரில் கூட 3, 4 பிரதிவாதிகளை பற்றி எந்த ஒரு விவரங்களையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் ஆதாரம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமலேயே 3, 4 பிரதிவாதிகள் விபத்திற்கு காரணம் என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். யார் சொல்லி எனக்கு 3ம் பிரதிவாதி விபத்திற்கு காரணம் என தெரியவந்தது என்று கேட்டால் 3ம் பிரதிவாதி தான் அந்த இடத்தில் கடை எடுத்து பெயிண்ட் அடித்து வந்தார் அங்கிருந்த ஒயரை பயன்படுத்திவிட்டு அவர் தான் விட்டு சென்று விட்டார். அதனால் அவர் பொருப்பு என இந்த வழக்கில் கட்சி செய்கின்றேன். யார் எனக்கு சொன்னார் என்று பெயர் நியாபகம் இல்லை. சந்தை எடுத்து நடத்தும் ஒரு நபர் சொன்னார். ஊர் தலைவர் சந்தை எடுத்து நடத்தியதாக சொன்னார்கள். நான் யூகத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி சண்முகம் பஞ்சாயத்து தலைவரும் இல்லை, சந்தையை அவர் ஏலம் எடுத்து நடத்தவும் இல்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி சம்பவ இடத்தில் இருந்து 7 கி.மீட்டர் தூரத்தில் உள்ள வெண்மணி என்ற கிராமத்தில் தான் பெயிண்ட் அடிக்கும் கடை நடத்தி வருகிறார் என்றும், இந்த விபத்திற்கும் 3ம் பிரதிவாதிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் 3ம் பிரதிவாதி பெயிண்ட் அடிக்கும் வேலை நடத்தி வந்தார் என யூகத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சந்தை நடத்தும் இடம் பேரூராட்சிக்கு சொந்தமானது என்றும், அதனால் பேரூராட்சியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு சேர்க்காததால் இந்த வழக்கானது குறைபாடு உடையது என்றால் சரியல்ல. என் கணவரின் வாகனத்தை வாடகைக்கு எடுத்து சென்றவர்கள் தான் என் கணவருக்கு ஏற்பட்ட விபத்திற்கு பொறுப்பு என்றும், அவர்களை

இந்த வழக்கில் நான் சேர்க்காததால் வழக்கு குறைபாடு உடையது என்றால் சரியல்ல. சந்தை நடத்தும் நிர்வாகிகள் யார் என்று சொல்லாததாலும், அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததாலும் வழக்கு குறைபாடு உடையது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விபத்து நடக்கவேயில்லை என்றும், அவ்வாறு நடந்திருக்கும் பட்சத்தில் போலீசார் டாடா ஏஸி வாகனத்தை ஆய்வுக்கு உட்படுத்தி இருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் யூகத்தின் அடிப்படையிலும், என் ஊர்காரர்கள் சொன்னதின் அடிப்படையிலும், தவறான வழக்கை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எந்த முகாந்திரமும் இன்று 3, 4,பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> -**

மேற்படி 3ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**<u>1, 2 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - ஒத்திவைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.